DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 187/2018

Prosecution witness for P.W.15

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. செல்வகுமார் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **18.11.2025.**

A2, A3,A4 are present.

முதல்விசாரணை:-

நான் தற்போது எப்போதும்வென்றான் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 2017 ஆம் வருடம் தூத்துக்குடி மாவட்டம், தாளமுத்துநகர் காவல்நிலையத்தில் 2 ம்நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். அப்போது காவலர் எண். 690 ஆகும். 06.01.2017 ஆம் தேதி பகல் 11.00 மணிக்கு தூத்துக்குடி தாளமுத்துநகர் காவல்நிலைய ஆய்வாளர் அவர்களிடமிருந்து கடவுச்சீட்டு பெற்று உத்தரவுப்படி காவல்நிலைய குற்ற எண். 2/2017 சட்டபிரிவு 294 பி, 307, 506(2) இதச @ 302, 506(2) இதச வழக்கில் கொலையுண்டு இறந்துபோன சங்கர்ராஜா என்பவரின் பிரேதத்தை இறப்பின் உண்மையான காரணம் அறியும் பொருட்டு பிரேத பரிசோதனை செய்ய கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதத்துடன் தூத்துக்குடி அரசுமருத்துவமனை சென்று பிரேத வைப்பறையிலிருந்து பிரேதத்தை பெற்று மருத்துவகல்லூரி மருத்துவரிடம் பிரேதத்தையும், வேண்டுகோள் கடிதத்தையும் ஆஜர் செய்து பிரேதத்தை அடையாளம் காட்டி பிரேத பரிசோதனையின்போது உடன் இருந்தும் பின்பு பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை நல்லடக்கம் செய்ய உறவினர் அவர்களிடம் ஒப்படைத்தும், மருத்துவர் ஒப்படைத்த பொருட்களை நிலையம் சென்று அறிக்கை செய்து ஆய்வாளர்

வசம்ஒப்படைத்தேன். அதற்காக பணி ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்ட கடவுச்சீட்டு நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–21** ஆகும்.

(எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என சொல்லப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 187/2018

Prosecution witness for P.W.16

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. செல்லத்துரை | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **18.11.2025.**

A2, A3,A4 are present.

முதல்விசாரணை:-

நான் தமிழ்நாடு காவல்துறையில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 31.05.2025 அன்று பணி ஓய்வு பெற்று தற்போது தூத்துக்குடி ஹவுசிங்போர்டு காலனியில் குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்பு 2017 ஆம் வருடம் தூத்துக்குடி மாவட்டம், தாளமுத்துநகர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். அப்போது 01.01.2017 ஆம் தேதி நான் நிலையத்தில் இருக்கும்போது எனக்கு கிடைத்த தகவலின்பேரில் தூத்துக்குடி அரசுமருத்துவகல்லூரி மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையிலிருந்த தாய்நகரை சேர்ந்த சங்கர்ராஜா த/பெ. கார்த்திக்ராஜா என்பவரின் இன்டிமேசனை பெற்று 18.00 மணிக்கு சிகிச்சையில் இருந்தவரை பார்க்கும்போது அவர் பேசமுடியாமல் இருந்ததால் அவருடன் இருந்த அவரது உறவினரான ரஞ்சித் குமார் என்பவர் நடந்து சம்பவத்திற்கு புகார் வாக்குமூலம் கொடுத்தார். அந்த புகார் வாக்குமூலத்தை 18.15 மணிக்கு பதிவு செய்து, நிலையம் 20.00 மணிக்கு வந்து அந்த புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 2/2017 சட்டபிரிவு 294 பி, 307, 506(2) இதச வழக்கு பதிவு செய்தேன். அதன் அசல் முதல்தகவல்அறிக்கையும், புகாரினையும், இன்டிமேசனையும் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2, தூத்துக்குடி நீதிமன்றத்திற்கு அனுப்பியும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர்

அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் திரு.முத்து அவர்களின் விசாரணைக்கு சம்பவ இடத்திற்கு கொடுத்து அனுப்பினேன். அதற்காக அரசுமருத்துவமனையிலிருந்து நான் பெற்ற காயத்தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 22** ஆகும். அரசு மருத்துவமனையில் அ.சா.1டம் நான் வாங்கிய புகார் வாக்குமூலம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அ.சா.ஆ–1தான். அதன்பேரில் நான் தயார் செய்த கணினி வழியிலான முதல்தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–23** ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில்)</u>

முதல்தகவல் அறிக்கையில் 6 குற்றவாளிகளின் பெயர்கள் குறிப்பிட்டிருக்கிறது என்றால் சரிதான். காலம் 15ல் முதல்தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு யார் மூலம் அனுப்பப்பட்டது என்ற விவரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். முதல்தகவல் அறிக்கை 09.01.2017 அன்றுதான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளது என்றால் சரிதான். முதல்தகவல் அறிக்கை நான் சொன்ன நாள், நேரத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், காலம் கடந்து வழக்கிற்காக பின்னிட்டு உருவாக்கப்பட்டுள்ளது என்றுசொன்னாலும் சரியல்ல. அதனால்தான் நீதிமன்றத்திற்கு காலதாமதமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றுசொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.